NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 19 October 2018

# துறைமுகத்துக்கான மெய்நிகர் பயிற்சி

அடுத்த தலைமுறை துறை முகங்களுக்கான மெய்நிகர் பாவனைப் பயிற்சிகளைப் புதிய ஆய்வு மையம் ஒன்று வடி வமைக்க இருக்கிறது.

2021ஆம் ஆண்டிலிருந்து தொடங்க இருக்கும் துவாஸ் துறைமுகத்துக்கான மெய்நிகர் பாவனைப் பயிற்சியைப் புதிதாக தொடங்கியிருக்கும் புதிய கடற் துறை ஆய்வு மையமான C4NGP வடிவமைத்து வருகிறது.

மெய்நிகர் பாவனைப் பயிற்சி யின் மூலம் துறைமுக நடவடிக் கைகள் துரிதமாக நடைபெறும் என்று கூறப்படுகிறது.

பகுப்பாய்வுத்திறன், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றை பாவனைப் பயிற்சி பயன் படுத்துகிறது.

குறைந்த நேரத்தில் ஆக அதிகமான கொள்கலன்களை நகர்த்துவது எப்படி என்பது குறித்து மெய்நிகர் பாவனைப் பயற்சி மூலம் கற்றுக்கொள்ளலாம். மேலும் இயற்கைப் பேரிடர்கள், மோசமான வானிலை ஆகிய வற்றின்போது துறைமுகத்தை எவ்வாறு வழிநடத்துவது என்பது குறித்து மெய்நிகர் பாவனைப் பயிற்சி மூலம் கற்றுத் தரப்படும்.

கெண்ட் ரிஜ் வட்டாரத்தில் இருக்கும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் புதிய கடற்துறை ஆய்வு மையம் அமைந்துள்ளது.

புதிய மையத்தைப் போக்கு வரத்து, சுகாதார மூத்த துணை அமைச்சர் லாம் பின் மின் நேற்று அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார்.

கடற்துறை, ஆய்வு பங்காளி களுடன் புதிய மையம் புரிந் துணர்வு ஒப்பந்தங்களில் கை யெழுத்திட்டுள்ளது.

புதிய மையத்தைக் கட்ட $18 மில்லியன் செலவாகி உள்ளது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் பொறியியல் பிரிவின் ஒரு பகுதியாக அது அமைகிறது.

சிங்கப்பூரின் கடற்துறை, துறைமுகத் துறைகளுக்கான புத்தாக்க திறன்களை உருவாக்க மையம் உதவி செய்யும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.